RBI/2005-06/174
DGBA GAD. No.H 3095/14.07.001/2005-06 அக்டோபர் 06, 2006

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்/ நிர்வாக இயக்குனர்
அனைத்து முகைமை வங்கிகளுக்கும்

அன்புடையீர்

அரசு வணிகம் நடத்தப்படுதல் – வரி செலுத்துவோருக்கு மின்னனு பணம் செலுத்தும் வசதிகளை அளித்தல் - இணைய தள வங்கிமுறைக்கு வழிகாட்டு நெறிகள்

அரசுத்துறைகளின் சார்பாக வரிகளை வசூளிக்கும்போது மின்னனு ஏற்பாடு மூலம் செய்வதை அறிமுகப்படுத்த அனுமதி கேட்கும் முகைமை வங்கிகளின் கோரிக்கைகளை நாங்கள் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

2. இது தொடர்பாக, நாங்கள் நினைப்பது என்னவென்றால் மின்னனு பணம் செலுத்தும் முறை மூலம் கிடைக்கும் நன்மைகள் அரசிற்கும் அதன் வாடிக்கையார்களுக்கும் விரிவு படுத்தப்பட வேண்டும். இவ்விஷயத்தில் எங்களது வங்கிகள் செயல்பாடு மற்றும் மேம்பாட்டுத்துறை (DBOD) சார்பான சுற்றறிக்கை RBI/005/06.71 ஜுலை 20, 2005 தேதியிட்டதில் உள்ள வழிகாட்டு நெறிகளை உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறோம். (www.rbi.org.in என்னும் எங்கள் இணையதளத்திலும் உள்ளது)

3. மேற்கண்டவைகளின் காரணத்தால், அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் சார்பாக மின்னனு பணம் செலுத்தும் வசதிகள் அமைப்பதற்கு தனித்தனியாக அனுமதி கோர வேண்டியதில்லை, மேலே குறிப்பிடப்பட்டுள்ள DBOD சுற்றறிக்கை 2005 ஜுலை 20 தேதியிட்டது காட்டும் வழிகாட்டுதலின்படி நடந்து கொள்ளலாம்.

4. பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

உங்கள் நம்பிக்கைக்குரிய

(கிரீஷ் கல்லியான்பூர்)
உதவி பொது மேலாளர்